மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய கட்டடம் கட்டச் சொல்கிறாரா அல்லது பழைய கட்டடத்தைச் சரி செய்து தரச் சொல்கிறாரா என்பது தெரியவில்லை. ஆகவே, பழைய கட்டடமாக இருந்தால், அதைச் சீர்செய்து தருவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும்; அந்தக் கட்டடம் சீர் செய்யப்படும். அதேசமயத்தில், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியை தருவதாகச் சொன்னார்கள். அந்த நிதியை ஒதுக்கிக்கொடுத்தாலும், வேகமாக அந்தப் பணியை முடித்துக் கொடுப்பதற்கு அரசு உங்களுக்கு உறுதுணையாக இருக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 110, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன், மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

110—

ஆவின் பாலகம் அமைத்தல்

***12055—திரு. என். முருகுமாறன்:**

மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்டுமன்னார்கோவில் தொகுதி, ஸ்ரீமுஷ்ணம் பேரூராட்சியிலுள்ள பேருந்து நிலையத்தில் ஆவின் பாலகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) காட்டுமன்னார்கோவில் தொகுதி, ஸ்ரீமுஷ்ணம் பேரூராட்சியிலுள்ள பேருந்து நிலையத்தில் காட்டுமன்னார்கோவில் சட்டமன்ற உறுப்பினர் திரு. என். முருகுமாறன் கேட்டுகொண்டதற்கிணங்க, சத்தான, சுவையான

2019 ஜூலை 15]

ஆவின் பால் விற்பனை செய்ய ஆவின் பாலகம் அமைக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன் அவர்கள்.*

முற்பகல் 11–10

திரு. என். முருகுமாறன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வங்கள், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொன்னடிகளையும், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய பொன்னடிகளையும் போற்றி வணங்குகிறேன்.*

இன்றைக்கு பொதுப் பணித் துறை, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை தொடர்பான மானியக் கோரிக்கைகள் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படவிருக்கின்றன. முத்தான மானியக் கோரிக்கைகள், எங்கள் சொத்தாக உள்ள மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய மானியக் கோரிக்கைகள் ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி)

அன்று காவேரியில் கல்லணை கட்டினான் கரிகாற்பெருவளத்தான். இன்று சுதந்திரம் பெற்றதற்குப் பின்னால் கொள்ளிடம் ஆற்றில் ம.ஆதனூருக்கும், கீழ்குமாரமங்கலத்திற்கும் இடையே கதவணை கட்டி, 'செங்கரும்பு கூட்டம் பார், செவ்வாழை தோட்டம் பார், செந்நெல்லின் ஆட்டம் பார்', என முப்போகம் விவசாயம் செய்யவும், நிலத்தடி நீர் உயரவும், கதவணை கட்டிய வாழும் கரிகாற்பெருவளத்தான், எங்களுக்கு வழியாகவும், விழியாகவும் உள்ள எங்கள் அண்ணன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு காட்டுமன்னார்கோவில் மற்றும் மயிலாடுதுறை தொகுதி மக்களுடைய சார்பாக நெஞ் சார்ந்த நன்றிகளையும், நல்வாழ்த்துகளையும் மிகுந்த அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் தொகுதியில் அமையப் பெற்றிருக்கிற ஸ்ரீமுஷ்ணம் பேரூராட்சியில் மிகுந்த சுவையோடும், மணக்கின்ற வகையிலும் ஆவின் பாலகம் அமைத்துத் தரப்படும் என்று சொல்லியிருக்கின்ற, வெள்ளை மனதிற்குச் சொந்தக்காரர்; இவர் விருதுநகர் மாவட்டத்திற்கு

மட்டும் சொந்தமல்ல; தமிழகத்தில் இருக்கக்கூடிய அனைத்து மாவட்டங்களுக்கும் சொந்தக்காரர் என்கிற வகையில் நல்ல பதிலைத் தந்திருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய சார்பாகவும், தொகுதி மக்களுடைய சார்பாகவும் நெஞ்சார்ந்த நன்றியினை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கடலூர் மாவட்டம், சேத்தியாதோப்பில் பால் பதப்படுத்தும் நிலையத்தில் உள்ள பழைய உபகரணங்களை மாற்றி, புதிய உபகரணங்களைப் பொருத்தி, ஒரு இலட்சம் லிட்டர் பால் பதப்படுத்தும் நிலையமாகத் தரம் உயர்த்தித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. முருகுமாறன் அவர்கள், சேத்தியாதோப்பு பால் பதப்படுத்தும் நிலையத்திலுள்ள பழைய உபகரணங்களை மாற்றி, புதிய உபகரணங்களைப் பொருத்தி, தரம் உயர்த்தி, ஒரு இலட்சம் லிட்டர் பால் பதப்படுத்தும் நிலையமாக மாற்றித் தர வேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கின்றார்கள். புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழி வந்த, அம்மா அவர்களுடைய வீரப் பிள்ளை, செல்லப் பிள்ளை, தமிழகத்தின் சிங்கமாக விளங்கக்கூடிய, கொங்கு நாட்டுத் தங்கம், எங்கள் அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய ஆட்சியில் கேட்டது கிடைக்கும், தட்டினால் திறக்கும் என்று சொல்லக்கூடிய அளவிற்கு புதிய புதிய விஞ்ஞான உத்திகளைப் புகுத்தி, பால் வளத் துறையை ஓர் அற்புதமான துறையாக மாற்றி வருகின்ற, இரண்டாம் வெண்மைப் புரட்சியை உருவாக்கி வருகின்ற, எங்கள் அண்ணன், எளிமையின் சின்னம் எடப்பாடியார் அவர்களுடைய ஆட்சியிலே ‘கேட்டது அத்தனையும் கிடைக்கும்’ என்பதற்கு அடையாளமாக மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. முருகுமாறன் அவர்களுடைய கோரிக்கை, அதிகாரிகளை வைத்து ஆய்வு செய்யப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஒப்புதலுக்காகப் பரிசீலனைக்குக் கொண்டு செல்லப்படும். நானும், சகோதரர் முருகுமாறன் அவர்களும் சென்று அந்த இடத்தைப் பார்த்து,

2019 ஜூலை 15]

சேத்தியாதோப்பில் உள்ள பால் பதப்படுத்தும் நிலையத்தில் உள்ள பழைய உபகரணங்களை மாற்றி, புதிய உபகரணங்களைப் பொருத்தி, அதனைத் தரம் உயர்த்தி, ஒரு இலட்சம் லிட்டர் பால் பதப்படுத்தும் நிலையமாக மாற்றியமைக்கப் பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன் அவர்கள்.

திரு. என். முருகுமாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்களுக்கும், மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்களுக்கும், என்னுடைய சார்பாகவும், அப்பகுதி மக்களுடைய சார்பாகவும், நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடலூர் மாவட்டத்தில் அதிகளவில் பால் உற்பத்தியாளர்கள் இருக்கின்றார்கள். அதிகளவிலே பால் விற்பனையும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இன்றைக்கு விழுப்புரம் மாவட்டத்திலிருந்து பிரித்து, புதியதாக கடலூர் மாவட்டத்தைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியத்தினை அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு, தங்களுக்கு நன்றி கூறி அமைகின்றேன்.

முற்பகல் 11–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் மற்றும் கடலூர் மாவட்ட பால் பண்ணை ஒன்றியம் 1–8–1983 அன்று துவங்கப்பட்டு, நல்லமுறையில் செயல்பட்டு வருகிறது. விழுப்புரம் ஒன்றியம் மற்றும் கடலூர் மாவட்டங்களை விவகார எல்லையாகக் கொண்டு சுமார் 700 சங்கங்களிலிருந்து 47,581 பால் உற்பத்தியாளர்கள்மூலம் தற்போது நாளொன்றுக்கு 2.50 இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது. ஒன்றியத்தில் நாளொன்றுக்கு 1 இலட்சம் லிட்டர் பால்

பதப்படுத்தும் திறன் கொண்ட பால் பதப்படுத்தும் பால் பண்ணை மற்றும் இரண்டு இடங்களில் நாளொன்றுக்கு 1.10 இலட்சம் லிட்டர் திறன் கொண்ட இரண்டு பால் குளிரூட்டும் நிலையங்கள் மற்றும் நாளொன்றுக்கு 78,000 லிட்டர் திறன் கொண்ட 17 தொகுப்பு பால் குளிர்விப்பான் மையங்கள் செயல்பட்டு வருகின்றன. ஒன்றிய பால் சேகரிப்புப் பணி, 66 பால் சேகரிப்பு ஒப்பந்த வழித்தடங்கள் வாயிலாகச் செயல்படுகின்றது. ஒன்றியம் தற்போது நாளொன்றுக்கு 22,500 லிட்டர் பாலை விற்பனை செய்து வருகிறது. உபரி பால், 1 இலட்சத்து 75,000 லிட்டர், 75 பால் நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. 13,500 லிட்டர் பாக்கெட் பாலில், நாள் ஒன்றுக்கு 3,000 லிட்டர் பால் பாண்டிச்சேரி விற்பனை நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்படுகிறது. மீதமுள்ள பால் இதர பால் பொருட்கள் தயார் செய்ய பயன்படுத்தப்படுகிறது. பால் பவுடர், பால் உப பொருட்களாக மாற்றப்படுகிறது. ஒன்றியத்தில் தற்போது மாதம் ஒன்றுக்கு 75 இலட்சம் மதிப்பீட்டுத் தொகையில் பால் மற்றும் பால் உப பொருட்கள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. ஒன்றியத்தில் தற்போது பால் விற்பனைக்காக 15 பால் விநியோக ஒப்பந்த வழித்தடங்கள் செயல்பட்டு வருகின்றன. ஒன்றியத்தில் தற்போது ஓர் அதி நவீன பாலகம் செயல்பட்டு வருகிறது. பள்ளிகள், கல்லூரிகள், அரசு அலுவலகங்களில் மொத்தம் 10 ஆவின் பாலகங்கள் அமைக்கப்பட்டு, செயல்பட்டு வருகின்றன; ஆகவே, கடலூர், விழுப்புரம் மாவட்ட பால் பண்ணை ஒன்றியங்கள் இலாபகரமாக இயங்கிக்கொண்டு வருகின்ற; அதைப் பிரித்து புதிய பால் பண்ணை ஒன்றியமாக அமைக்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. முருகுமாறன் அவர்கள் கோரிக்கை வைத்திருக்கிறார். அவர்களது கோரிக்கை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்

(பட்டியல்கள் 9 முதல் 11 வரை)@

—

@ இப்பட்டியல்களிலுள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதலளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தவையாகும்